★ இனக்கலவரங்களினால் பாதிக்கப்பட்டு

# இடம்பெயர்ந்த மலையக இளைஞர்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்தனர்


பக்கங்கள் நான்கு — விலை ரூபா 4 - 50

முரசொலி

முரசு 05 ஒலி 212 பிரசோற்பத்தி ஆனி 14 ( 28-06-1991 ) வெள்ளி


## கொழும்புப் பத்திரிகை தகவல்

1977 இல் நடைபெற்ற இனக்கலவரங்களின் போது பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த அநேகமான இளம் மலையக இளைஞர்கள் விடுதலைப்புலிகளுடன் இணைந்துள்ளனர் என கொழும்புப் பத்திரிகை செய்தியொன்று தெரிவிக்கிறது. இனக்கலவரங்களினால் இடம்பெயர்ந்த இந்த மலையக வம்சா வளியினர் வன்னிப் பகுதியிலேயே அதிகமாக தங்கியிருந்தனர். வன்னிப் பகுதி அடிக்கடி இராணுவ நடவடிக்கைக்கு உள்ளாவதும் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளும் இப்பகுதி மலையக இளைஞர்களை அவ்வியக்கத்தில் அதிகமாக இணையத் தூண்டியுள்ளது எனக்குறிப்பிடும் அப்பத்திரிகை இப்பகுதி மோதல்களின் போது படையினருக்கு எதிரான நடவடிக்கையில் இந்த மலையக இளைஞர்களும் பங்கு பற்றுகின்றனர் எனக்கூறுகிறது

● இலங்கைத்தமிழ் அகதிகளை விரைவில் திருப்பி அனுப்ப நடவடிக்கை

# அகதிகள் ஐ. நா. தூதரகத்துடன் இந்திய அரசு அவசரத் தொடர்பு

## வடக்கில் முகாம் அமைப்பது குறித்து ஒரு மாத கால அவகாசம் கேட்டுள்ளது

**தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு இந்திய மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுத்துள்ளது.**

இது தொடர்பாக இந்திய மத்திய அரசு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்துடன் அவசியம் தொடர்பு கொண்டுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் (யூ. என். எச். சி ஆர்) ஒரு மாதகாலத்தில் இதற்கான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் இந்திய அரசு கேட்டுள்ளது.

நாடுதிரும்பும் அகதிகளை வடக்கில் எங்கே குடியமர்த்துவது, அவர்களின் பாதுகாப்பு என்பன குறித்து அகதிகளுக்கான ஐ நா. பிரதிநிதிகள் ஆராய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ப11, 74

## யாழ் அரசாங்க அதிபர் மயிரிழையில் தப்பினார்

கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.58க்கு கூட்டுப் படைத்தலைமை அலுவலகம் முன்பாக குண்டு வெடித்த போது அங்கு செல்லவிருந்த யாழ் அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் மயிரிழையில் உயிர்தப்பினார்.

சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் காலை 9. 30 மணியளவில் அரசாங்க அதிபர் அப்பகுதிக்கு வந்து கொண்டிருந்தபோது குண்டுவெடித்ததாக செயலகவட்டாரங்கள் தெரிவித்தன. (ப-11,74)

# இராணுவதலைமையகம் மீதுதாக்கு திருப்தியளிக்கிறது -திலகர்

கொழும்பு இராணுவத் தலைமையகம் மீது நடாத்தப்பட்ட வாகன வெடி குண்டுத் தாக்குதல் குறித்து கருத்துக்கூற பாரிஸில் உள்ள விடுதலைப் புலிகளின் பிரமுகர் லோரன்ஸ் திலகர் மறுத்துள்ளார்.

தாக்குதல் நடாத்தியது புலிகள் தான் என்பதையோ அல்லது புலிகள் இத் தாக்குதல் நடாத்தவில்லை என்பதையோ திலகர் கூற மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

எனினும் தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவத் திட்டங்களை வகுக்கும் இந்தத் தலைமையகம் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் திருப்தி அளிப்பதாகத் திலகர் குறிப்பிட்டார்.

## வவுனியா, அநுராதபுர இராணுவ கூட்டுத்திட்டமே "வன்னி விக்கரம"

வவுனியாவின் மேற்குப் பகுதியில் கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்ற "வன்னி விக்கரம" என்ற இராணுவ நடவடிக்கை அநுராத புர,வவுனியா இராணுவ தலைமையகங்களால் தயாரிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தோல்வியில் முடிந்த இந்த இராணுவ நடவடிக்கை பெருமளவில் இராணுவ விமானப் படை உதவியுடன் திட்டமிடப்பட்டிருந்தது.

கேர்ணல் சாந்தா கோட்டேகோட தலைமையிலான விக்கும் பிரிகேட் இந்த படை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் செயலகத்தில் வைத்து பாஸ்போர்ட் விண்ணப்பம்

யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து பாஸ்போர்ட் பெறுபவர்களுக்காக நாலாயிரம்விண்ணப்பங்கள் அடுத்து வரும் கப்பலில் வரவுள்ளன.

விண்ணப்பதாரிகள் தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை நேரில் காண்பித்து அரச அதிபர், மேலதிக அரச அதிபரின் கையொப்பங்களை அதில் பெற்றாலே விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

செயலகத்தில் வைத்து ஏற்கப்படும் விண்ணப்பங்கள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## 6ஆம் இலக்கத் தொடர் உணவு முத்திரை கிடையாது

நாற்பத்திரண்டு கட்டங்களுக்குரிய உலர் உணவு விநியோகம் முடிவடைந்த பின்னரே ஆறாம் இலக்கத் தொடர் உணவு முத்திரை வழங்கப்படும் என கொழும்பு உயர்மட்டக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

'கம் உதாவ' நிகழ்ச்சிகள் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதியுடன் இது குறித்து பேசப்படும் எனவும் அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ப-11)

## காங்கேசன்துறை துறைமுகப் பகுதியை பாதுகாப்பு வலயமாக்க அரசு மறுப்பு

'தைப்போன்' 'வில்லிலில்லி' என்ற இரு கப்பல்கள் மூலம் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அண்மையில் அனுப்பப்பட்டு அங்குள்ள களஞ்சிய சாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

இக்களஞ்சிய சாலையில் உள்ள உணவுப்பொருள்களை யாழ் மாவட்டத் தேவைக்கு எடுத்துச் செல்லுமாறு யாழ் அரசாங்க அதிபருக்கு அரசு அறிவித்திருந்தது,

உணவு விநியோக நடவடிக்கைகளுக்காக ஒரு உணவுக் கட்டுப்பாட்டதிகாரியும், களஞ்சிய பொறுப்பாளரும் கொழும்பில் இருந்து காங்கேசன்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறைக்கு துறைமுகப் பகுதியை பாதுகாப்பு வலயமாக மாற்றாமல் அதிகா

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கைதான கொள்ளையர்கள்

விடுதலைப்புலிகள் என்று பாவனை செய்து வடமாகாணத்தில் கொள்ளைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கண்ணன் என்பவர் கைது செய்யப்பட்டதையடுத்து அவரது குழுவைச் சேர்ந்தவர்கள் ஒன்பது பேர் இதுவரை கைதாகியுள்ளனர்.

செல்லத்துரை பரராஜசிங்கம் (ராஜன்) அரியாலை,

→ 04 ஆம் பக்கம் பார்க்க

# யாழ் செயலகத்தில் பணிபுரியும் 51 ஊழியருக்கு நிரந்தர நியமனம்

யாழ் செயலகத்திலும், உதவி அரச அதிபர் பணிமனைகளிலும் அமைய அடிப்படையில் அலுவலக ஊழியர் சேவையில் கடமையாற்றிய ஐம்பத்தொரு ஊழியர்கள் நிரந்தர சேவையில் நியமிக்கப்பட்டுள்ளார்கள், இதற்கான உறுதிப்படுத்தும் கடிதங்கள் அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்டுள்ளன,

41/88 இலக்க முடையதும் 25-11-88 திகதியிடப்பட்டதுமான பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்க வடக்கு - கிழக்கு மாகாணபொதுச் சேவையில்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வாகனத் தாக்கு நடக்கிறது

அண்மைக்காலமாக வாகனங்களில் வெடிமருந்து ஏற்றப்பட்டு வந்து தாக்குதல்கள் நடக்கிறது.

வடக்குக் கிழக்குப் பிரச்

→ 04 ஆம் பக்கம் பார்க்க

முதலமைச்சர் ஜெயலலிதா திடீர் அறிவிப்பு

# 1987 ராஜீவ் - ஜே. ஆர் ஒப்பந்தம்

# செயலிழந்து விட்டது!



1987 இல் இலங்கையுடன் இந்தியா செய்துகொண்ட இரு நாட்டு ஒப்பந்தம் செயலிழந்துவிட்டதாகத் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

1987 இல் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும், இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் கைச்சாத்திட்ட இந்த ஒப்பந்தத்திற்குப் பதிலாக புதிய ஒப்பந்தமொன்று செய்துகொள்ளப்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

புதுடில்லியில் இந்தியப்பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்து இருநாடுகளுக்குமிடையே புதிய ஒப்பந்தமொன்றை ஏற்படுத்துவது குறித்து தான் விரைவில் பேச்சு நடாத்துவுள்ளதாகவும் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் செயலிழந்தது குறித்து இந்திய அரசியலில் உயர் பொறுப்பு வகிக்கும் தலைவர் ஒருவர் பகிரங்கமாகவே ஒத்துக்கொண்டுள்ளமை இதுவே முதற்தடவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதாவின் இந்தத் திடீர் அறிவிப்பு இந்திய இராஜதந்திரிகள் மத்தியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஊருக்கெல்லாம் சொல்லும் பல்லி தன் பலனை அறியுமோ?

பிரிட்டனில் செல்லப் பிராணிகள் வளர்ப்போரினால் அங்கு பல்லிகளுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

செல்லப் பிராணிகளை விற்பனை செய்யும் கடைகளுக்குச் சென்று பல்லியைக் கேட்டால் கையிருப்பு முடிந்து விட்டது - அடுத்த வாரம் வரும் என்ற பதிலே கிடைக்கும்

அங்கு கள்ளச் சந்தையில் ஒரு பல்லி 300 பவுண் (10 ஆயிரம் ரூபா) ஆக விற்கப்படுகிறது

அதிலும் ஆறு அங்குல நீளத்தையுடைய, 20 ஆண்டுகளுக்கு வாழும் கறுப்பு நிறப் பல்லிக்கு அங்கு அமோக கிராக்கி.

இந்தப் பல்லிக்கு ஏற்பட்டுள்ள கிராக்கியால் பல்லியைக் கண்ணி வைத்துப் பிடிப்போரின் தொகையும் அங்கு அதிகரித்துள்ளது. இந்தப் 'பல்லி பிடிப்பு'ச் சுற்றுப்புறச் சூழலைப் பாதிப்பதினால் பொது இடங்களில் பல்லி பிடிப்போருக்கு அங்கு 2000 பவுண் (75 ஆயிரம் ரூபா) தண்டனை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

• உலகுக்குப் பலன் சொல்லும் பல்லிக்கு அதன் பலனைச் சொல்ல யாருமேயில்லை.

## உண்மையாகப் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கப் பணிப்பு

இராணுவ நடவடிக்கைகளின்போது கடமையில் இருந்து இறந்த அல்லது அங்கவீனமாக்கப்பட்ட ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் போது ஒவ்வொரு அலுவலர்கள் பற்றிய பூரணவிவரங்களைப் பெற்று அவ்விவரங்களின் நம்பகத் தன்மையைப் பொறுத்தே நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளை வழங்குமாறு வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சகலபிராந்தியப்பணிப்பாளர்களையும் பணித்துள்ளார்.

பொது நிர்வாக சுற்று நிருபங்களின் படி இவ்வாறு நோயுற்ற அல்லது அங்கவீனமாக்கப்பட்ட ஊழியர்களது குடும்பத் தலைவர்களுக்கு அல்லது அவர்களை அண்டி வாழ்வோர்க்கு சம்பந்தப்பட்ட ஊழியரது சம்பளமும் படிகளும் அவருக்கு ஐம்பது ஐந்து வயது வரும்வரை முழுமையாக வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளதாகவும் இதன்படி நடவடிக்கை எடுக்குமாறும் அவர் பணித்துள்ளார். 78

## சம்பேதுருவார் உற்சவம்

புலோப்பளை கிழக்கு புனித சம்பேதுருவார் ஆலய உற்சவம் 20ஆந் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

28ஆந் திகதி மாலை திருச்சொரூப பவனியும், 29ஆந் திகதி காலை 7-30 மணிக்கு திருப்பலிப் பூசையும், மாலை 5.30 மணிக்கு அன்னதானமும் இரவு 8-30 மணிக்கு 'தாவீது' நாட்டுக் கூத்தும் இடம் பெறும்.

## நீதி உதவி உதைப்பந்தாட்டம்

யாழ் பல்கலைக்கழக அணிக்கும் குருநகர் பாடும் மீன் அணிக்குமிடையில் 1ஆம் திங்கட்கிழமை சிநேக பூர்வ உதைபந்தாட்டப் போட்டி யாழ்பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

1990 யூன்மாதம் மட்டக்களப்பில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவன் என். கிருபாகரனின் குடும்ப நிதி உதவிக்காக இப்போட்டி நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் மேற்படி இரு அணிகளும் மிக முன்னணி அணிகனாக கணிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## 'கெல்ற்' பயிற்சிகள் மேலும் தாமதமாகும்

யாழ் மாவட்டத்தில் புதிதாகத் தெரிவாகியுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கான ''கெல்ற்'' ஆங்கிலப் பயிற்சிகள் மேலும் தாமதமடையலாம் எனக் கல்வித்திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1989/ 90 கல்வியாண்டு மாணவர்களுக்குரிய வெளிக்களப் பயிற்சிக் கொடுப்பனவையும், விரிவுரையாளர்களுக்கான கொடுப்பனவையும் உயர் கல்வி அமைச்சு இதுவரை யாழ் கல்விப்பகுதிக்கு வழங்கவில்லை.

இதனாலேயே இங்கு 1990-91 கல்வியாண்டுக்குரிய வகுப்புக்களை நடாத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தென்பகுதியில் கெல்ற் வகுப்பு இம் மாதம் 17 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது

## ஆறு மாதத்தில் 75 மாணவர்களுக்கு விவசாயத்தில் குறுகிய காலப் பயிற்சி

இவ் ஆண்டு முதல் ஆறு மாதங்களில் மட்டும் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் 75 க்கும் மேற்பட்டவர்கள் பயிற்சி பெற்றுச் சான்றிதழ்களுடன் வெளியேறியுள்ளனர் எனப் பண்ணை முகாமையாளர் திருமதி த. கந்தசாமி முரசொலிக்குத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இயங்க முடியாத நிலையில் இருந்த இப்பாடசாலை தற்போது விவசாய விஞ்ஞானம் மற்றும் ஏனைய துறையில் பயிற்சிகளை வழங்கிவருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

## நாவலர் கலாசார மண்டபத்தில் மீண்டும்;கல்வி, சமயநிகழ்ச்சிகள்

யாழ் நாவலர் கலாசார மண்டபத்தை ஆவலை முதலாம் திகதி சமூக கலாசார கல்வி சமய நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்த மீண்டும் அனுமதி வழங்கப்படவுள்ளது

இது விடயமாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை யாழ் மாநகர ஆணையாளரிடம் கோரிக்கையொன்றை விடுத்தியிருந்தது.

யாழ் மாநகர ஆணையாளர் ஆறுமுக நாவலர் சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் நாவலர் கலாசார மண்டபத்தை மீண்டும் திறந்துவிட ஒழுங்குகள் செய்யப்படுவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டொனால்ட் கிண்ணப் போட்டி; ஜொனியன்ஸ் வெற்றி பெற்றது

சென்றலையிற்ஸ் கழகத்தினரால் நடாத்தப்படும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட, டொனால்ட் பரிசுக் கிண்ணத்திற்கான கிரிக்கட் போட்டித் தொடரில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ஜொணியன்ஸ் அணியினர் வெற்றி பெற்றனர்.

முதலில் துடுப்பெடுத்தாடக் களத்தில் இறங்கிய ஜொனியன்ஸ் அணி 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 255 ஓட்டங்களைக் குவித்தது. இதில் அணித்தலைவர் வீரன் ரீ. சதீசன் பெற்ற ஓட்டங்கள் 113 என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் நொதேண் அணியினர் தமது துடுப்பாட்டத்தில் 49.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 162 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதினால் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று.

இப்போட்டியின் சிறந்த ஆட்டக்காரராக ரீ. சதீசன் தெரிவு செய்யப்பட்டார்' (16.

## பிரிட்டனில் அடைக்கலம் கோரும் தமிழர்களின் தொகை அதிகரிப்பு

இலங்கையில் இருந்து பிரிட்டனுக்கு வந்து சேரும் இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை கடந்தசில ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

பிரிட்டிஷ் உள்துறை அமைச்சின் புள்ளிவிவரங்களின்படி 1989 ஆம் ஆண்டில் 2000 அகதிகளும் 1990 ஆம் ஆண்டு 3600 அகதிகளும் பிரிட்டனுக்கு வந்துள்ளார்கள். தற்போது அகதிகள் வரும் நிலையைப் பார்க்கும் போது 1991 இல் 6000 ஆக அதிகரிக்கும் என உள்துறை அமைச்சுகணித்துள்ளது.

இப்படிப் பெருந்தொகையானோர் எப்படி இலங்கையை விட்டுப்புறப்படுகிறார்கள் என்பது அதிகாரிகளுக்குப் பெரும் புதிராக உள்ளது என கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (74 )

## 8 இஸ்ரேலியர்கள் கடத்தல்; ஒருவர் சூட்டுக்குப் பலி!

வட இந்தியாவில் ஸ்ரீ நகரில் காஷ்மீர் தீவிர வாதிகளினால் இரு பெண்கள் உட்பட எட்டு இஸ்ரேலியர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் கடத்தல் காரர்களுடன் ஏற்பட்ட இழுபறியில் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், மேலும் மூன்று இஸ்ரேலியர்கள் சூட்டுக் காயங்களுக்கு உள்ளானதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

அத்துடன் ஒரு கடத்தற்காரரும் இந்த மோதலில் கொல்லப்பட்டார்.

40 பேர் கொண்ட குழுவாக இந்தியாவுக்குச்சுற்றுலா வந்த இந்த இஸ்ரேலியர்கள் காஷ்மீரில் படகு வீட்டில் தங்கியிருந்த போதே கடத்தப்பட்டதாகத்,தெரிவிக்கப்படுகின்றது.

## எழுதுவினைஞர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை

அரசாங்க, மற்றும்மாகாண சபை அலுவலகங்களிலுள்ள எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர் பதவி வெற்றிடங்களை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தற்பொழுது சேகரித்து வருகிறது.

ஜூலை மாதம் 5 ஆம் திகதிக்குப் பிந்தாமல் வெற்றிட விவரங்களைத்தமக்கு அனுப்பி வைக்குமாறு சகல திணைக்களத் தலைவர்களையும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு கோரியுள்ளது

இப்பதவிகளுக்குப் புதியவர்களைப் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்வதற்காகவே இந்த விவரங்கள் தற்பொழுது திரட்டப்படுகின்றன.

## வவுனியா கல்விக் கல்லூரியை முஸ்லிம் பகுதிக்கு மாற்ற முயற்சி

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வவுனியாப் பகுதியில் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ள கல்விக் கல்லூரியினை வவுனியாவை விட்டுக் கிழக்கில் முஸ்லிம் பகுதிக்கு மாற்றத் திரைமறைவில் முயற்சி எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது

நொச்சிமோட்டையில் இதற்கென 50 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு நில அளவை வேலைகளும் முடிந்திருந்தன.

வட கிழக்கு மாகாணத்துக்குரிய கல்லூரியாக இது அமைகின்றது

500 மாணவர்கள் தங்கியிருந்து கல்வி பயில வசதி கொண்டதாக 20 கோடி ரூபா செலவில் இதனை அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது (74)

## விமானக் கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை

வெளிநாடுகளில் தொழில் புரிவோர் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான விமானக் கட்டணத்தைச் செலுத்தத் தேவையில்லையென வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

வெளிநாடுகளில் பணிபுரியத் தெரிவு செய்யப்படுவோர் வெளிநாடு செல்வதற்கான விமானக்கட்டணத்தைத் தொழில்வழங்கும் நிறுவனங்கள் இங்குள்ள முகவர்களுக்கு அனுப்பி வைக்கின்றன.

இதனால் மேலதிகமாக விமானக் கட்டணங்களை முகவர்களுக்கு வழங்கக் கூடாதெனவும் பணியகம் கேட்டுள்ளது.


## சிறு விளம்பரம்


### தவறிவிட்டது

ய. பரந்தாமன் எனும் பெயரும் 732230203V எனும் இலக்கமுள்ள தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து K. யதுகுலசிங்க உடற்கல்வி விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் எனும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

06092

# கரும்புலிகளின் வீரம், தியாகம் உலக அதிசயத்தில் புதியதொன்று

## தாக்குதலுக்கு முண்டியடித்து அலையலையாகத் திரளும் தீரம்!



'கரும்புலிகள்' என்ற வார்த்தைப் பிரயோகம் உலகளாவிய ரீதியில் ஒவ்வொருவராலும் பேசப்படும் சக்தி மிக்கதொரு சொற்பதமாகிவிட்டது.

இந்தக் கரும்புலித் திட்டத்தின் கரு உருவானது தலைவர் பிரபாவின் மூலமே. கரும்புலிகள் களம் புகுவதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னரேயே தங்களுடைய சாவைத் தெரிந்துகொண்டு விடுகிறார்கள். அடுத்த நிமிடத்தில் சாகப் போகின்றேன் என்ற உண்மையைப் பூரணமாகத் தெரிந்து கொண்டுதான் கரும்புலிகள் வெடிமருந்தைத் தங்களுடன் கொண்டு செல்லுகின்றனர்.

இது ஒரு சாதாரண வீரனால் செய்ய முடியாதது. இதைச் செய்வதற்கென்றொரு ஆன்மீக பலம் தேவை. தன்னை அழித்துக் கொள்ளத்தயாரான மனோதிடம் தேவை. தனது இறுதி நேரத்திலும் கூடப்பதட்டமின்றி, உறுதியுடன், குறி பிசகாது எதிரியைத் தேடி ஓடும் வீரம் தேவை, விவேகம் தேவை, விரக்தி காரணமாகவோ முட்டாள் தனமாகவோ தன்னை அழித்துக் கொள்ளு முனையும் தற்கொலை முயற்சியைப் போலல்ல இது.

உலகின் எந்த ஆயுதங்களாலும் வெற்றி கொள்ளப்பட முடியாததும், உலகின் எந்தத் தொழில் நுட்பத்தாலும் தடுக்க முடியாததும், உலகின் எந்த அரச இயந்திரத்தாலும் அடக்க முடியாததும்தான் எங்களது கரும்புலிகளின் மனோபலம்.

இன்று பல நூற்றுக்கணக்கான புலிவீரர்கள் தங்களைக் கரும்புலி அணியில் இணைத்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு முறையும் கரும்புலித்தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்படும் போது தன்னைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென ஒவ்வொரு வீரனும், வீராங்கனையும் முண்டியடிக்கிறார்கள்.

அலையலையாக கரும்புலித்தாக்குதலுக்குத் தயாராகும் இந்தத் தியாகச் செயலை உலகில் எங்குமே காணமுடியாது. இது உலக அதிசயங்களில் புதியதொன்றாகும்.

நன்றி விடுதலைப்புலிகள்
(1991 - ஆனி)

# 4 இந்திய மீன்பிடி இழுவைப்படகுகள்

## ஸ்ரீலங்கா கடற்படையால் கடலில் தீக்கிரை

இந்திய மீனவர்களின் நான்கு இயந்திரப்படகுகளை ஸ்ரீலங்கா கடற்படையினர் தீவைத்துக் கொழுத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தனுஷ்கோடிக்கும் கச்சதீவுக்குமிடையே இச்சம்பவம் நடந்துள்ளது.

இப்படகுகள் இராமேஸ்வரம் மீனவர்களுக்குச் சொந்தமானவை. தீயை அணைக்க விடாமல் கடற்படையினர் தடுத்ததாகவும் இதனால் 3 படகுகள் முற்றாகவே எரிந்து நாசமாகிவிட்டதாகவும் மீனவர்கள் தமிழக, மத்திய அரசுகளுக்குப்புகார் செய்துள்ளனர்.

# 'பிக்கப்' வாகனத்தின் உரிமையாளர் கைது

கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட 'பிக்கப்' வாகனத்தின் முன்னாள் உரிமையாளர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக ஏஜன்ஸி செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இந்த பிக்கப் வாகனத்தை விற்பதற்கு உதவிய தரகரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## திருட்டு

நள்ளிரவு நேரத்தில் வீடு புகுந்த திருடர் 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சாவகச்சேரி கற்குழி என்னும் இடத்தில் உள்ள மார்க்கண்டு துரைராஜா என்பவரது வீட்டிலேயே இச்சம்பவம் நடந்துள்ளது.

சூட்கேசில் இருந்த 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் 8 பவுண் டல் பிறிஸ்ரல் சிகரற்றுமே அங்கு திருடப்பட்டுள்ளன ப-5

# குண்டுவெடிப்பில் இறந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடு

கொழும்பு பிளவர் வீதி குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களில் வயதுவந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும், சிறுபிள்ளைகளுக்கு 20 ஆயிரம் ரூபாவும் நஷ்டஈடாக வழங்கப்படவுள்ளது.

இக்குண்டு வெடிப்பில் சேதமுற்ற வீடுகளுக்கு 2 லட்சம் ரூபாவும், வர்த்தக நிலையங்களுக்கு 5 லட்சம் ரூபாவும் கடனாக வழங்கப்படவுள்ளது.

அத்துடன் சேதமுற்ற வாகனங்கள் இயந்திரங்களைத் திருத்தவும் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

இறந்தவர்களின் குடும்பங்களுக்கு மரணச் சடங்குச் செலவாக தலா 5 ஆயிரம் ரூபா உடனடியாக வழங்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (74)

# குண்டுவெடிப்பில் உயிர் தப்பிய 60 சிப்பாய்கள் விசாரணையில்

கூட்டுப் படைத் தலைமையகத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்புத்தொடர்பாகபொலிஸார் அக்கம் பக்கத்திலுள்ள சுமார் 300 பேரைவிசாரணை செய்துள்ளனர்.

மேலும் இக் குண்டுவெடித்த சந்தர்ப்பத்தில் கூட்டுப் படைத் தலைமையகத்தில் கடமையிலிருந்த இராணுவத்தினரில் உயிர்தப்பிய சுமார் 60 பேரின் சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. (74)

# காலிழக்கும் படையினருக்காக காலியில் செயற்கை அவயவத் தொழிலகம்

காலி மாவட்டத்தில் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் உற்பத்தித் தொழிலகம் ஒன்று' கொழும்பு நட்புறவுச் சங்கத்தினால் நிறுவப்படவுள்ளது'

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் உற்பத்தித் தொழிலகத்தில் முகாமையாளராகக் கடமையாற்றும் அமெரிக்கரான றொபேட்சிங்கர் இது பற்றிக் குறிப்பிடுகையில் நவீன தொழில்நுட்ப அறிவைக் கொண்டு இக் கால்கள் உற்பத்தி செய்யப்படுவதாகவும் இதற்கான நிதியுதவியை யு. எஸ். எயிட் நிறுவனம் வழங்குவதாகவும் கூறினார்.

தற்போது வடக்குக்கிழக்கில் இடம் பெறும் யுத்தத்தில் அதிகளவான படையினர் தமது கால்களை இழந்துள்ளதினால் செயற்கை அவயவங்களுக்குத் தெற்கில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (74)

# குவைத்தில் வங்கிக் கட்டுப்பாடு ஆகஸ்ட் முதல் நீக்கப்படும்

குவைத்திலுள்ள வங்கிகளிற் பணத்தை மீளப் பெற விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு ஆகஸ்ட் மாதம் முதல் முற்றாக நீக்கப்படவுள்ளது.

வளைகுடா யுத்தத்தையடுத்து குவைத் வங்கிகளிலிருந்து 4000 டினார்களை மட்டுமே மீளப்பெற அனுமதி வழங்கப்பட்டது

இந்தக் கட்டுப்பாடு மே ஓம் தளர்த்தப்பட்டு அடுத்த மாதம் முதல் 6000 டினார் மீளப்பெற அனுமதி வழங்கப்படவுள்ளது.

இந்தக் கட்டுப்பாடு ஆகஸ்ட் முதல் முற்றாக நீக்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது

# புதிய ஆங்கில ஆசிரியர்களில் 275 பேர் திருமலைக்கு

புதிதாகத் தெரிவு செய்யப்படவுள்ள ஆங்கில ஆசிரியர்களில் 275 பேர் திருமலை மாவட்டத்தில் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்த 3000 புதிய ஆசிரியர்களில் 200 பேர் அம்பாறை மாவட்டத்திற்கும், 75 பேர் வவுனியாமாவட்டத்திற்கும் நியமிக்கப்படவுள்ளனர்.

போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பின்னர் இனவிகிதசார அடிப்படைக்கேற்ப குறித்த மாவட்டங்களுக்கு நியமிக்கப்படுவர்.

வடக்கில் யாழ், கிளி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆங்கில ஆசிரியர் பதவிகளுக்கு கணிசமான வெற்றிடங்கள் உள்ள போதிலும் இந்த மாவட்டங்களில் எத்தனை ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பது குறித்து இதுவரை தெளிவாக எதுவும் அறிவிக்கப்படவில்லை. (ப-11)

## இன்று பொங்கல்

நல்லூர் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தில் வருடாவருடம் நடைபெறும் பொங்கல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது (33

# போலிச் சான்றிதழ் வழங்கிய ஐந்து அதிபர்கள் இடைநிறுத்தம்

தொண்டர் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்களை நன்கு பரிசீலிக்குமாறு கல்விச் சேவைகள் ஆணைக்குழு கல்விப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளது.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்காகப் பல அதிபர்கள் போலிச் சான்றிதழ்களை வழங்கியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை யெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தொண்டர் ஆசிரியர்களுக்குப் போலிச் சான்றிதழ்களை வழங்கிய ஐந்து அதிபர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் பலர் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

# செய்தி உலகம்

## 1000 பாதுகாப்புப் புகலிடங்கள்

பங்களாதேஷில் அடிக்கடி புயல், கடல் அலைகளினால் பாதிக்கப்படும் பல கரையோரப் பகுதிகளிலும், மற்றும் நடுக்கடலிலுள்ள தீவுப் பகுதிகளிலும் 1000 புயல் பாதுகாப்புப் புகலிடங்களை அமைத்துக் கொடுக்க ஜப்பான் முன்வந்துள்ளது. இத்திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் ஜப்பான் நிறைவேற்றவுள்ளது.

## படை வெளியேற்றம் தாமதம்

கிழக்கு ஜேர்மனியிலிருந்து தனது துருப்புக்களை வெளியேற்றுவதைச் சோவியத் ரஷ்யா தாமதப்படுத்தியுள்ளது.

நாடு திரும்பும் படையினருக்கான குடியிருப்புக்களைக் கட்டி முடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளமையே இதற்குக் காரணம் என ரஷ்யா கூறியுள்ளது.

இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் ஜேர்மனி இப்படையினரின் குடியிருப்புக்களை அமைப்பதற்கு வழங்க இணங்கிய 450 டாலர் தொகையை வழங்காது நிறுத்தியுள்ளது. கிழக்கு ஜேர்மனியில் இன்னமும் 3 லட்சம் ரஷ்யப் படையினர் தங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## 29 பேரும் உயிர் தப்பினர்

குவைத்தில் ஈராக் படையினருடன் இணைந்து செயற்பட்டதாகக் குற்றம் சாட்டி மரணதண்டனை விதிக்கப்பட்ட 29 பேருக்குமான மரணதண்டனையைக் குவைத்இளவரசரும், பிரதமருமான ஷேக் அல் அப்துல்லா ஆயுள் தண்டனையாக மாற்றியுள்ளார்.

குவைத் சிறப்பு இராணுவ நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பைப் பல மேலைத்தேய நாடுகளும், மனித உரிமை அமைப்புக்களும் கண்டித்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 200 ஆண்டு உறக்கம் கலைந்தது

அந்தமான் நிக்கோவாத் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த பரன் தீவில் 200 ஆண்டுகளாக அடங்கிக் கிடந்த எரிமலை அனற்பிழம்பையும், சாம்பலையும் கக்கத் தொடங்கியுள்ளது. மனித சஞ்சாரமற்ற இத்தீவு சென்னையிலிருந்து 743 மைல் தூரத்தில் அமைந்துள்ளது.

### குண்டு வெடிப்பு நேரில் கண்டவர் தகவல்

# தொங்கியிருந்த பல சடலங்கள் தீயணைக்கும் போது வீழ்ந்தன

கூட்டு படை தலைமை யகத்தின் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதலில் 60க்கும்மேற் பட்ட இராணுவத்தினர் பலி யானதை தான் நேரில் கண்ட தாக யாழ் திரும்பிய தொண் டர் நிறுவன பிரதிநிதியொரு வர் முரசொலிக்கு தெரிவித் தார்.

இப்பிரதிநிதி அவசரமீட்புப் பணிக்காக அங்கு உடனடி யாக அனுப்பப்பட்ட குழுவில் அடங்கியிருந்தார், இப்பிரதி நிதி இச்சம்பவம்பற்றி மேலும் அவர் கூறியதாவது,

"இந்த மீட்புப் பணியில் 40க்கும் மேற்பட்ட அம்பு லன்ஸ்வண்டிகள் ஈடுபடுத்தப் பட்டன.

கூட்டுப்படைத் தலைமைய கம் அமைந்திருந்த வளவு எங் கும் சடலங்களும் இராணுவத் தினரின் பலரக ஆயுதங்களும் சிதறிக் கிடந்ததைக் கண் டேன்.

100க்கும் மேற்பட்ட வாகனங்கள் நொருங்கிய நிலையில் அங்கு காணப் பட்டன, அம்புலன்ஸ் களில் முதலில் காயமடைந்த வர்கள் ஏற்றப்பட்டனர். அதன் பின்னர் இராணுவ அம்புலன்ஸ் வண்டிகளில் இறந்தபடையினரின் சடலங் கள் அடுக்கு அடுக்காக ஏற்றப் பட்டனபின்னர் தீயணைக்கும் படையினர் வந்து மாடிக் கட் டடங்களில் தீயகற்றிய போது அங்கே தொங்கியிருந்த சட லங்கள் கீழே விழுந்ததை நான் கண்டேன்.

மீட்புப் பணிக்காக நான் அங்கு சென்ற போது கூட பல இராணுவத்தினர் அதிர்ச்சி அடைந்தவர்களாக அங்கு மிங்கும் ஓடியவண்ணம் இருந் னர்.

இக்குண்டுவெடிப்பின்போது 30க்கும் மேற்பட்ட பொது மக்கள் இறந்துள்ளதாகவும் இதில்தமிழ் பெண்மணியொரு வரும் அடங்குவர்.

மீட்புப் பணிநடை பெற்ற சமயம் அமைச்சர்களின் வாக னங்கள் கூட உள்ளே அனு மதிப்பதில் இராணுவ கட்டுப் பாடு விதித்திருந்ததாம் (74)

## கண்டன மகஜர்கள் ஜனாதிபதி கவனத்துக்கு

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற ஆர்ப் பாட்ட ஊர்வலங்களின் போது மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்ட மகஜர்கள் ஜனாதிபதியின் செயலாளரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் கொழும் பில் இருந்தபோது இந்த மகஜர்கள் அவருக்கு இங்கி ருந்து மேலதிக அரசாங்க அதிபரால் அனுப்பி வைக்கப் பட்டிருந்தன. (ப11 74)

## பத்திரிகைச் செய்திக்கு சபாநாயகர் மறுப்பு

கொழும்பு மாநகரசபையின் முன்னாள் மேயர் ஹுசையின் முகமட்டை மீண்டும் மேய ராக நியமிக்குமாறு அவரது தந்தையாரும் சபாநாயகரு மான எம். எச். முஹமட் ஜனாதிபதி பிரேமதாஸாவை சந்தித்துப்பேசியதாக்கொழும் பில் இருந்து வெளியாகும் சில பத்திரிகைகள் செய்தி வெளி யிட்டுள்ளன

இந்தச் செய்தி முற்றிலும் தவறானது என்றும் தான் ஜனாதிபதியுடன் மகனை மேயராக்குவது குறித்து எவ் வித பேச்சும் நடத்தவில்லை எனவும் சபாநாயகர் எம். எச். முஹமட் தெரிவித்துள் ளார். (33)

### மலேரியாப்தடுப்பு வேலைகள்

## மலத்தியோன் தருவிக்க கிளிநொச்சியில் ஏற்பாடு

கிளிநொச்சி மாவட்டத்தில் மலேரியா தடுப்பு வேலை களை மேற்கொள்ள மலத்தி யோன் மருந்து கொழும்பில் இருந்து தருவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சுகா தார அமைச்சு அதிகாரிகளு டன் பேச்சு நடாத்த மலே ரியா தடுப்புப் பகுதி அதிகாரி கள் இவ்வாரம் கொழும்பு செல்லவுள்ளனர்.

கடந்த ஆண்டு யுத்தம் ஆரம்பித்ததையடுத்து இப் பகுதியில் மலேரியா தடுப்பு வேலைகள் மேற்கொள்ளப் படாமல் மலேரியா நோய் தீவிரமாகப் பரவிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நோய் அதிகரித்து பலருக்கு மூளைக்காய்ச்சல் ஏற்பட்டதுடன் உயிரிழப்பு களும் நிகழ்ந்துள்ளதாகவும் சுகாதாரப்பகுதி வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

தினமும் சுமார் 300 பேர் வரை மலேரியாவால் பீடிக் கப்பட்டு சிகிச்சைக்கு வந்த தாக ஆஸ்பத்திரி வட்டா ரங்கள் தெரிவித்தன. (ப-6)

### அராலி வீதியில் கண்ணாடித்துண்டுகள்

ஒட்டுமடம் அராலி வீதியின் அருகில் உடைந்த கண்ணா டித் துண்டுகளைச் சிலர் போடுவதால் அவை வீதிக்கு பரவியுள்ளன இதனால் அப் பகுதியால் செல்வோர் அசௌகரியங்களுக்கு உள்ளா வதாகத் தெரிவிக்கப்படுகிறது (48)


## அறிவித்தல்

யாழ் விஞ்ஞான மன்றமும், பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியமும் இணைந்து நடாத்தும்

### பனை வள ஆய்வரங்கும் கண்காட்சியும்

காலம்: 29, 30-6-1991 காலை 9.00 மணி
இடம்; யாழ் - பல்கலைக் கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

06096 ஒருங்கிணைப்புக் குழு,


### பணிப்பாளர் மறுப்பு

நேற்றுமுன்தினம் 27ஆம் திகதி வெளியான 'தொடர்ந்தும் பணிபுரியுமாறு உதவிப் பணிப்பாளருக்கு பணிப்பு' என்ற செய்தி தவறு என கல்விப்பணிப்பாளர் தெரிவித் துள்ளார்.

## ராஜீவ் காந்தி கொலை மற்றும் ஒருவர் கைது

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக தமிழகத்தில் மற்றுமோர் இலங்கையர் கைதாகியுள்ளார். கொக்கு விலைச் சேர்ந்த ஜெயக்குமார் என்பவரே கைதானவர்,

தற்போது தேடப்பட்டு வரும் சிவராஜன் என்பவருக்கு இவர் அடைக்கலம் வழங்கிய தாகக்குற்றஞ்சாட்டப்பட்டுள் ளது.

கைதான அறுவர்களில் இவர் இரண்டாவது இலங் கையராவார்.

## எக்ஸ்கதிர் இயந்திரங்களை யாழ் கொண்டுவர ஏற்பாடு

யாழ் பெரியாஸ்பத்திரி மந்திகை ஆதார வைத்திய சாலை ஆகியவற்றிற்கெனஜப் பானிய அரசு வழங்கிய எக்ஸ் கதிர் இயங்க இயந்திரங் களை இங்கே கொண்டுவர யாழ் அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் நடவடிக் கையெடுத்துள்ளார்.

இந்த இரண்டு இயத்திரங் களும் சுகாதார அமைச்சில் கடந்த ஒரு வருடமாக தவம் கிடந்தன இவற்றை தென் பகுதியில் உள்ள ஆஸ்பத்தி ரிக்கு அனுப்ப சுகாதார அமைச்சு ஒழுங்கு செய்திருந் தது.

கொழும்பு சென்ற அர சாங்க அதிபர் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு இந்த இயந்திரங்களின் அவசிய தேவை குறித்து விவரமாக எடுத்துக் கூறியிருந்தார்,

புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் எஸ். யோக நாதனும் இந்த இயந்திரங் கள் இன்றி யாழ்ப்பாணப் பகுதி மக்கள் படும் அவல நிலையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விளக்கிக்கூறி யதும் குறிப்பிடத்தக்கது.

இவை விரைவில் இங்கு கொண்டுவரப்படவுள்ளதா கவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன (ப 11 74 47)

### கைதான—

பொன்னுத்துரை விஜயகுமார் (குஞ்சன்) பண்டத்தரிப்பு, குழந்தையன் செல்வராசா (பெரியராசா)சண்டிலிப்பாய், கந்தசாமி உதயேந்திரன் (அப்புலிங்கன்) அராலி, பால சிங்கம் திருச்செல்வம் (சின்ன ராசா) சங்கானை, ஜெய ராசா ஜெயக்குமார் குமார்) சுழிபுரம், சின்னக்குட்டி இந் திரன் (ரூபன்) சங்கானை, கார்த்திகேசு கந்தசாமி (ஜெயம்) மல்லாகம், சுப்பிர மணியம் சுதாகர் (சுதா) சாவகச்சேரி, ஆகியோரே கைதானவர்களாவர்,

### வவுனியா—

யணியில் மூன்றாம் கஜபாபிரி வும் அடங்கியிருந்தன

இராணுவ நடவடிக்கைக் காக படையினர் 76 மி. மி. பீரங்கிகளையும் 120எம்.எம், 81எம். எம். மோட்டார்களை யும், 17 மைல் தாக்கும் 130 எம். எம். கனரக பீரங்கிகளை யும் பயன்படுத்தியுள்ளனர்.

இதைத்தவிர வடபிராந்திய விமானப்படையின்கொமாண் டர் சுனில்கபரால் தலைமை யிலான விமானப்படையும் பங்குபற்றியது.

எனினும் மோதலின்போது ஒருதடவை விடுதலைப்புலி கள் கடும் தாக்குதல் நடாத் தியதால் 400மீற்றரை கடக்க படையினருக்கு இரண்டுமணி நேரம் சென்றதாகத் தெவிக் கப்படுகிறது. 33

### யாழ்—

அலுவலக ஊழியர் சேவை தரம் II பதவியில், இவர்கள் நிரந்தர சேவையில் நியமிக் கப்பட்டுள்ளார்கள்.

சுமார் பதினைந்து வருடங் களுக்கும் மேலாக அமைய ஊழியர்களாகக் கடமையாற் றிய இந்த ஊழியர்களை சேவையில் உறுதிப்படுத்தும் படி கோரி அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் எடுத்த முயற்சியின் பயனாகவே இந்த நியமன உறுதிப் படுத்தல் கடிதங்கள் வழங்கப்பட்டுள் ளன,

அண்மையில் கொழும்பு சென்ற அரசாங்க அதிபர் திருமலைக்கும் சென்று இக் கடிதங்களை நேரில் பெற்று வந்து இங்கு வழங்கினார், 47

### தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு

## க. பொ. த. சா. தரம் புதிய கட்டண விவரம்

1991 ஆம் ஆண்டு க. பொ. த. சாதாரண தரப் பரீட் சைக்கு தோற்றும் தனிப் பட்ட பரீட்சார்த்திகளுக்கு புதிய பரீட்சைக் கட்டணங் களை பரீட்சைத் திணைக்க ளம் அறிவித்துள்ளது.

புதியகட்டண விவரம் வரு மாறு: 1 பாடம் 15 ரூபா, 2 பாடங்கள் 20 ரூபா, 3 பாடங்கள் 25 ரூபா, 4 பாடங்கள் 30 ரூபா, 5 பாடங்கள் 40 ரூபா, 6 பாடங்களுக்கும் அதற்கு மேலும் தோற்றும் பாடங்க ளுக்கு 50 ரூபா என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 74

## அனுமதிப்பத்திரமின்றி மண்ணெண்ணெய் கடத்தல்

கொழும்பிலிருந்து யாழ்ப் பாணத்திற்கு வந்த இரண்டு லொறிகளில் 89 மண்ணெண் ணெய்ப் பீப்பாய்கள் அனும திப்பத்திரம் இல்லாது கொண்டுவரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அநுராதபுரத்தில் இந்த லொறிகளை சோதனையிட்ட படையினர் மண்ணெண் ணெய் பீப்பாய்களைக் கண்டுபிடித்ததாகவும் லொறி களின் சாரதிகள் உட்பட நாலுபேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகிறது. 33

## க. பொ. த விண்ணப்பங்களை அதிபர்கள் பெறலாம்

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தில் உள்ள க. பொ த சாதாரணதர வகுப்புக் களைக் கொண்ட பாட சாலை அதிபர்கள் இன்று காலை 10 மணிக்கு க பொ த. பரீட்சை விண்ணப்பங் களை பண்டத்தரிப்பு கல்விப் பணிமனையில் பெற்றுச் செல்லுமாறு உதவி கல்விப் பணிப்பாளர் திரு. சண்முக ராசா கேட்டுள்ளார்.

இவ்விண்ணப்பங்களை பூர்த்தி செய்து 30ஆம் திகதி மீண்டும் ஒப்படைக்குமாறு அதிபர்கள் வேண்டப்பட்டுள் ளனர். (12)

## ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம்

வடக்குக் கிழக்கு உள்ளு ராட்சிச் சேவை ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் இரண் டாவது பொதுக் கூட்டம் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும்.

அங்கத்தவர்களையும் உள் ளூராட்சிச் சேவை ஓய்வூதி யர்களையும் இப்பொதுக் கூட் டத்தில் கலந்து கொள்ளு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது,

### வாகன—

சினைக்கு ஆயுதம் அல்லாது பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண அரசு தயாராக உள் ளது.

இவ்வாறு ஜனாதிபதி பிரே மதாஸ் நேற்றுமுன்தினம் மிருந்தலையில் நடைபெற்ற மத நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் தெரி வித்தார்.

### யாழ் செயலகத்தில்—

இனிமேல் கப்பல் மூலம் அனுப்பப்பட்டு பாஸ்போர்ட் பெற எற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

இதே வேளை கடந்த ஒரு வருடமாக 1300 வட பகுதி யைச் சேர்ந்தவர்களின் கட வுச்சீட்டுகள் கொழும்பு குடி வரவு குடியகல்வு அலுவலகத் தில் தேங்கிக்கிடப்பதாகவும் இவற்றை உரியவர்களிடம் வழங்கக்கூட்டுப்படைதலைமை யகம் மறுத்துள்ளதாக குடிவ ரவு குடியகல்வு வட்டாரங் கள் தெரிவித்தன ப-11 72

### காங்கேசன்துறை...

ரிகளோ உணப்பகுதி லொறி களோ அப்பகுதிக்கு செல்ல முடியாது என்று யாழ் அர சாங்க அதிபர் கொழும்பில் வைத்து சம்பந்தப்பட்ட அதி காரிகளுக்கு எடுத்துக் கூறி யுள்ளார் ஆனால் அரசு அதற்கு மறுத்துள்ளது.

பருத்தித்துறை துறை முகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றும், பருத்தித் துறை ஊடாகவே உணவுப் பொருள்களை அனுப்ப வேண்டும் என்றும் அரசாங்க அதிபர் பாதுகாப்பு அமைச் சுக்கு வலியுறுத்திக்கூறியுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகி றது. (ப 11, 74, 33

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத் தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத் தில் 28. 06. 91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.